# துவக்கெடுத்தவனெல்லாம் சண்டைக்காரனா?

மக்களே கேளுங்கள்.

இது என்ன கொடுமை!

நாங்கள் இலங்கைப் பிரஜைகளா? அல்லது தமிழ் ஈழத்தவரா?

இலங்கையிலென்றால் எம்மவர்களது அதிகாரக்கரங்களின் கீழ் மக்கள் சிக்குப்படுகின்றார்களென்றால், அரசியல் தஞ்சங்கேட்டு அகதிகளாக வந்திருக்கிற இங்கேயுமா அந்த நிலை?

இங்கே நாமெல்லோருமே அகதிகள். குறைந்தபட்சம் இந்நாட்டுச் சட்டங்களுக்குத்தான் கட்டுப்பட்டவர்கள். இங்கேயிருக்கும் சில தனிமனிதர்களுக்கோ, அல்லது குழுக்களுக்கோ நாம் கட்டுப்பட்டவர்களல்ல. அப்படி யாரும் யாரையும் கட்டுப்படுத்தி விடவும் முடியாது. அப்படிப்பட்டதொரு உரிமையை இங்கே யாரும் யாருக்கும் வழங்கி விடவும் இல்லை.

ஆனால் இங்கே நடப்பவைகளைப் பார்த்தால் எம்மவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதைச் சிலர் குத்தகை எடுத்துக் கொண்டு இருப்பதைப் போல் தெரிகிறது.

அவர்கள் தம்மைப் 'புலிகள்' என்று அழைத்துக் கொள்கிறார்கள்.

இந்தப் 'புலிகள்' என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

இங்கே யாரும் தமக்கெதிராகக் கதைக்கக் கூடாதாம், யாரும் தமக்கெதிரான பிரச்சாரங்களைச் செய்யக் கூடாதாம், தமக்கெதிரான புத்தகங்களை, பிரசுரங்களை வெளியிடக் கூடாதாம்,

இவை மட்டுமா?

தாம் விற்பனை செய்யும் வெளியீடுகளை ஏன், எதற்கு என்று கேட்காமல், மறுக்காமல் பணம் கொடுத்து வாங்க வேண்டுமாம்.

இவைகளை மீறினால்....

இங்கே, யாழ்ப்பாணப் பாணியில் ஆட்கடத்தல், அடித்தல், வன்முறை... அராஜகம்...

இப்படி இன்னும் எத்தனையோ... எத்தனையோ.

இவையனைத்தும் இங்கே நடக்கின்றது என்பதை நம்புவதற்கு கூட கடினமாக இருக்கின்றதல்லவா? ஆனாலும் இது கசப்பான உண்மையே.

தமக்கெதிரான கருத்துடையவர்களை புலிகள் பல தடவைகள் தாக்கியிருக்கிறார்கள். [illegible] மட்டுமல்ல உலகம் பூராவுமே தமிழர்கள் மீது புலிகள் அதிகாரம் செய்ய உரித்துடையவர்கள் என்று இவர்கள் கூறிக்கொள்கிறார்கள்.

கூறுவதோடு நிற்காமல் தொடர்ச்சியான தமது காடைத்தனங்களினால் அதனை நிரூபித்தும் வருகிறார்கள். மாற்று இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று யாரையாவது இவர்கள் கண்டால் உடனே அவர்கள் மீது தமது காடைத்தனத்தைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள். தமிழர்கள் அதிகமாகக் கூடும் வர்த்தக நிலையங்களின் முன்பாக புலிகள் பத்திரிகை விற்பதாகப் பாசாங்கு செய்து கொண்டு தமது வெறித்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டி அகதிகளாக அங்கீகரித்த இந்த நாட்டில் வாழும் சக தமிழர்களுக்குமே இவர்கள் அவமானத்தைத் தேடிக் கொடுக்கிறார்கள். தமக்கெதிரான கருத்துக்களை தமது கருத்துக்களால் வெல்ல முடியாது என்ற ஆற்றாமை, இவர்களது அரசியல் வறுமைதான் இவற்றிற்கெல்லாம் காரணம். ஆயினும் இவற்றிற்கெல்லாம் புலிகள் பதில் சொல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது. 'புலி' என்பது பெயருக்கேற்றவாறு 'மிருக'மாக வெறியெடுக்குமாயின் அது வேட்டையாடப்படும். இல்லை, தாங்களும் மனிதர்கள்தான் என்பதை அவர்கள் உணர்வாராயின் அரவணைக்கப்படுவர். இதில் தமக்கு எது சம்மதம் என்பதை புலிகள் தீர்மானிக்கட்டும். மக்களே தயாராயிருங்கள். இதனைப் புலிகளுக்கு உணர்த்துவோம்.

இப்படிக்கு,

"அனைத்து அராஜகங்களுக்கும் எதிரான" புதிய முற்போக்கு கூட்டமைப்பு